தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.318/மா/2023
நாள்.03.01.2024

திரு.R.மயில்சாமி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் (2) வடக்கு,
மதுரை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 09.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.09.2023 அன்று பெறப்பட்டு, 318/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 09.09.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி கோச்சடை நடராஜ் நகர் கதவு எண்.1ல் சுரேஷ் வீதியில் உள்ள G.V.மருத்துவமனை மூன்று மாடிகளை கொண்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனை 24 மணிநேரமும் செயல்பட்டு வருகிறது. G.V. மருத்துவமனை கட்டிடத்திற்கு நான்குபுறமும் அரசு விதிகளின்படி 13 அடி இடைவெளி இடம் (set back spaces) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும் G.V.மருத்துவமனை கட்டிடத்திற்கு வாகனம் நிறுத்துவதற்கு (parking spce) இடம் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள், வெளிநோயாளிகள் மற்றும் பார்வையாளர்களின் வாகனங்களான இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர

வாகனங்களை தெருவில் நிறுத்துவதனால் இவ்வழியாக செல்லும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும் மற்றும் பொதுமக்கள் யாவரும் நடந்து செல்ல மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள்.

மேலும் இவ்வழியே கல்லூரி வாகனம், பள்ளி வாகனம், குடிநீர் வாகனம், ஆம்புலன்ஸ் வாகனங்கள் ஆட்டோக்கள் செல்லும்போதும் விபத்துக்கள் ஏற்பட்டு போக்குவரத்து நெரிசலில் பலபேர் துன்பப்பட்டு வருகிறார்கள். இதுகுறித்து புகாரினை 31.08.2023 தேதியில் பதிவு தபாலில் ஆணையர் மற்றும் செயற்பொறியாளர்(திட்டம்) அவர்களிடம் புகார் தெரிவித்துள்ளேன். மேலும் G.V. மருத்துவமனை கட்டிடத்தை ஆரம்ப நிலையில் கண்காணிக்க தவறிய சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படி G.V. மருத்துவமனை கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி வருவாய் துறையிடம் உரிமம் பெறாமல் இயங்கி வருகிறது. எனவே சட்டத்திற்கு புறம்பாக வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடாமலும், நான்கு புறமும் அரசு விதிகளின்படி 13 அடி இடைவெளி இடம் (set back spaces) விடாமலும் வரைபட அனுமதியை விட கூடுதலாக கட்டிடம் கட்டியுள்ள G.V.மருத்துவமனையை, நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகள் 56 (1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடும் Lock and seal and demolition தாக்கீதும் வழங்கி மற்றும் விரைவான நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர்(திட்டம்) அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக பணிவன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 02—ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) மதுரை மாநகராட்சி, மண்டலம் 02ன் உதவி ஆணையர் (பொ) தனது 17.12.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

மனுதாரர் புகார் தெரிவித்த மருத்துவமனை மதுரை மாநகராட்சியிலிருந்து கட்டிட வரைபட அனுமதி முறையாக பெற்றுள்ளது என ஆய்வில் கண்டறியப்பட்டது. ஆய்வின்போது, மேற்படி மருத்துவமனையில் தற்போதைய நிலையில், ஏற்கனவே மாநகராட்சியிலிருந்து பெறப்பட்ட கட்டிட அனுமதிக்கும் கூடுதலாக கட்டப்பட்ட கூடுதல் அளவுகள் கண்டறியப்பட்டது. மேலும் ஏற்கனவே கட்டப்பட்டு இருந்த கட்டடத்திற்கே அளவீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கூடுதலாக கட்டப்பட்ட அளவுகளுக்கு உரிய விளக்கம் அளிக்குமாறு மேற்படி மருத்துவமனை நிர்வாகத்திற்கு மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 296 (1), 296(2) மற்றும் 296(3)ன்படி சார்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

மேற்படி மருத்துவமனை, மாநகராட்சியில் பெற்றிருந்த கட்டிட வரைபட அனுமதிக்கும் கூடுதலாக கட்டியுள்ள அளவுகளுக்கு உரிய அபராதம் விதித்து அபராதத்தொகையுடன் சொத்துவரி, வரிவிதிப்பு செய்திடவும் கூடுதலான கட்டிட அளவுகளை மதுரை மாநகராட்சி சட்டம் 1971ன் விதிமுறைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகள் 2019ன்படி முறைபடுத்திட

நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் மாண்புமிகு நடுவத்திற்கு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தென்காசி மாவட்டம், குற்றாலம் சர்க்யூட் ஹவுஸில் 04.12.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 04.12.2023 அன்று பெய்த பெருமழையின் காரணமாக அன்றைய விசாரணை நடைபெறவில்லை. பின்னர் 12.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 18.12.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது.

6) மனுதாரர் 18.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

'' மதுரை மாநகராட்சி கோச்சடை நடராஜ் நகர் சுரேஷ் வீதியில் உள்ள G.V. மருத்துவமனை மூன்று மாடிகளை கொண்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனை கட்டிடத்திற்கு நான்குபுறமும் அரசு விதிகளின்படி set back spaces விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவமனை சுமார் 3250 சதுர.அடிக்கு மட்டுமே மாநகராட்சியில் கட்டட அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட அளவிற்கும் கூடுதலாக சுமார் 8700 சதுர அடிக்கும் மேல் கட்டடம் கட்டியுள்ளனர். மேற்கண்ட கட்டத்திற்கு நான்குபுறமும் இடம் (set back) விடப்படவில்லை.

மேலும் அம்மருத்துவமனைக்கு வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு வாகன நிறுத்துமிடம் விடாமல் கட்டப்பட்டுள்ளதால் அம்மருத்துவமனைக்கு வருவோர் தங்களது வாகனங்களை தெருவிலேயே நிறுத்திச் செல்வதால் அவ்வழியாக செல்லும் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

எனவே, அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டடம் கட்டியும், கட்டடத்தின் நான்குபுறத்திலும் விதிகளின்படி (set back space) விடாமலும் வாகன நிறுத்துமிடம் இல்லாமலும் கட்டடம் கட்டப்பட்டு இயங்கி வரும் மேற்கண்ட மருத்துவமனைக்கு stop work notice/notice for approved plan தாக்கீதும், நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56 மற்றும் 57ன்படி நடவடிக்கை மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை (நிலை) எண் 7 நாள் 10.01.2023ன்படி மாநகராட்சியால் நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) மதுரை மாநகராட்சி மண்டலம் –02ன் உதவிப்பொறியாளர் 18.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

'' தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ புகார் எண் 318/மா/2023 வழக்கு தொடர்பாக 18.12.2023 இன்று குற்றாலம் விருந்தினர் மாளிகையில் G.V. மருத்துவமனை, கோச்சடை, சம்மந்தமாக ஆணையர் முன்னிலையில் நேரில் ஆஜராகி விளக்கமளித்தேன் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் உதவி ஆணையரின் 17.12.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம் –02ன் உதவிப் பொறியாளர் வாக்குமூலம் மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மதுரை மாநகராட்சி கோச்சடை நடராஜ் நகர் கதவு எண்1ல் சுரேஷ் வீதியில் உள்ள G.V. மருத்துவனை அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது என்றும் மற்றும் அக்கட்டிடத்திற்கு அரசு விதிகளின்படி 13 அடி இடைவெளி இடம் (set back space) விடவில்லையென்றும், வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடவில்லையென்றும் அதனால் பார்வையாளர்கள் தங்களுடைய இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்களை தெருவில் நிறுத்துவதால் பொதுமக்கள் நடப்பதற்கு இடையூறாகவுள்ளதாகவும், இது குறித்து மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் செயற்பொறியாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் எனவே அனுமதியைவிட கூடுதலாக கட்டப்பட்ட இவ்மருத்துவனை மீது நகர்ஊரமைப்பு சட்டம் 1971ன்படி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட மேற்கண்ட G.V. மருத்துவமனை கட்டிடத்திற்கு வரைபட அனுமதி 02.07.2009 வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆய்வில் அக்கட்டிடம் அனுமதிக்கும் கூடுதலாக கட்டப்பட்டப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு கூடுதலாக கட்டப்பட்ட அளவுகளுக்கு நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், அனுமதிக்கும் கூடுதலாக கட்டியுள்ள அளவுகளுக்கு உரிய அபராதம் விதித்து அபராதத் தொகையுடன் சொத்துவரி, வரிவிதிப்பு செய்திடவும் கூடுதலான கட்டிட அளவுகளை மதுரை மாநகராட்சி சட்டம் 1971ன்படி பிரிவு எண் 56, 57, 80ன்படி 26.11.2023 அன்று தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகள் 2019ன்படி முறைபடுத்திட நடவடிக்கையில் உள்ளது என்று மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி ஆணையர் (பொ) தன்னுடைய அறிக்கையிலும், மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

மதுரை மாநகராட்சி கோச்சடை நடராஜ் நகர் கதவு எண்1 சுரேஷ் வீதியில் இயங்கும் G.V.மருத்துவமனை கட்டிடத்திடத்திற்கான வரைபட அனுமதி 02.07.2009 அன்று வழங்கப்பட்டுள்ள நிலையில், அம்மருத்துவமனை வரைபடி அனுமதிபடி கட்டப்படுகிறதா என்பதை கள ஆய்வு செய்யாமல் தங்களுடைய கடமையிலிருந்து மதுரை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலர்கள், உதவி ஆணையர் உட்பட தவறிவிட்டனர் என்பது தெள்ள தெளிவாகிறது. இச்செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். மனுதாரர் மேற்கண்ட மருத்துவமனை குறித்து புகார் மனு அளித்தபின்னர் தான் அக்கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு 26.11.2023 அன்று தாக்கீது வழங்கப்பட்டது மிகவும் துரதிருஷ்டவசமானது என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும் இத்தகைய மதுரை மாநகராட்சியின் மண்டலம் 2ன் அலுவலர்களின் நடவடிக்கை அனுமதியின்றி கட்டப்படும் கட்டட உரிமையாளர்களுக்கு உடந்தையாக மதுரை மாநகராட்சியின் அலுவலர்கள் செயல்படுவது உறுதியாகிறது. இது மதுரை மாநகராட்சியின் நற்பெயருக்கு மிகவும் களங்கம் ஏற்படும் என்று இம்முறைமன்றம் சுட்டிகாட்ட விரும்புகிறது. மேலும், அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து Town and Country Planning Act 1971ன்படி நடவடிக்கை எடுக்காமல் மதுரை மாநகராட்சி சட்டம் 1971ன்படி நடவடிக்கை எடுத்து இருப்பது ஏற்புடையது அல்ல. எனவே மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி ஆணையரின் அறிக்கையை இம்முறைமன்றம் நிராகரிக்கிறது

மேலும், இம்மாதிரியான அனுமதியின்றி கட்டிடம் மற்றும் கூடுதலாக கட்டப்படும் கட்டிடங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க அரசாணை (நிலை) எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023 ல் அமலாக்க நடவடிக்கை விதிகள் மற்றும் அறிவிப்பு படிவங்களை வெளியிட்டுள்ளது. அவ்வாணையில் மற்றவற்றிக்கிடையில் (among others)

" The Government issue the following guidelines to the Tamil Nadu Town and Country Planning (Removal of Unauthorised Development) Rules 2022 to streamline the enforcement action on unauthorized developments under section 56 and 57 of Tamil Nadu Town and Country Planning Act. 1971:-

Procedures/Guidelines to be followed:

1. Is there a need to call for records from the individual?

(1) Hon'ble High Court of Madras in its order dated 02.11.2022 in W.P.No.28929 of 2022 and W.M.P.No.28223 of 2022 filed by Thiru A.P. Ravi has observed as below:

*"in several cases notices are being issued requiring the alleged violators to produce the sanctioned plan. It is quite surprising that the Enforcement Authority, which is the plan sanctioning Authority also, seeks copy of the sanctioned plan from the violator concerned. We do not find any legal provision under the Town and Country Planning Act supporting such a notice. It is also found that time is granted for production of sanctioned plan and thereafter a notice is issued requiring the violator to bring the development in conformity with the sanctioned plan and on failure to bring it into conformity, lock and seal notice is issued. This procedure is not contemplated under the Town and Country Planning Act."*

(ii) Since the issue of notice calling approved plan is not contemplated under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 as observed by the Hon'ble High Court, the authority concerned should confirm from its database on whether any approval has been issued for building in the site. If the same is confirmed then the enforcing authority shall retrieve the copy of approved plan from its records and the authorized official shall carry the same for site inspection.

(iii) In cases where the database does not indicate any approval granted or copy of approved plan is not available with the enforcing authority, the principles of natural justice require an opportunity to be given to the building owner to produce the records including approved plan, if any available with them. In such cases, the notice in Form-I shall be issued by giving atleast 3 days time to produce the documents.

After issuance of notice in Form-I calling for records from the individuals and on receipt of records/non-receipt of the records within stipulated time, inspection should be made by the authorized officer for which notice of inspection in Form II should be issued.

XXXXXXXXX

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் 22.12.2022 நாளிட்ட சுற்றறிக்கையில்:—

"மேற்காணும் அரசாணையில் (அரசாணை எண் (நிலை) எண் 195 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 05.11.2022) வெளியிடப்பட்டுள்ள விதிகளை பின்பற்றியும் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வுகளுக்கட்பட்டு அனுமதியற்ற அல்லது அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டுமானங்கள் மற்றும் அபிவிருத்திகள் மீது அமலாக்க நடவடிக்கைகளை கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அனைத்து ஆணையாளர்களுக்கும், நகரமைப்பு அலுவலர்கள் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது."

இந்நேர்வில் மேற்கண்ட அரசாணை மற்றும் சுற்றறிக்கை ஆகியவை பின்பற்றப்படவில்லை என்பது மட்டுமல்லாமல் இவ்வரசாணை மற்றும் சுற்றறிக்கைப்பற்றிய விழிப்புணர்வு மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலர்களுக்கு இல்லை என்றும் இம்முறை மன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது

2014—ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறிப்பாக:—

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

பிரிவு: 12(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

கீழ் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது,

மதுரை மாநகராட்சி கோச்சடை நடராஜ் நகர் கதவு எண்1 சுரேஷ்வீதியில் இயங்கும் G.V. மருத்துவமனை கட்டிடத்திடத்திற்கான வரைபட அனுமதி 02.07.2009 அன்று வழங்கப்பட்டு அக்கட்டிடம் வரைபட அனுமதிபடி கட்டப்படுகிறதா என்பதை கள ஆய்வு செய்ய தவறியும், புகார் மனு பெறப்பட்டபின்னர் கூடுதலாக கட்டப்பட்ட அம்மருத்துவமனைக்கு காலம்தாழ்த்தி 26.11.2023 அன்று தாக்கீது வழங்கியதற்கும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன்படி நடவடிக்கை எடுக்காதற்கும் மேலும் அரசாணை( நிலை) எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ல் வெளியிடப்பட்ட அமலாக்க நடவடிக்கை வழிமுறைகளை பின்பற்றாதது மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் 22.12.2022 நாளிட்ட சுற்றறிக்கையை கவனத்தில் கொள்ளாதது ஆகியவற்றிக்கு காரணமான மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் சம்பந்தப்பட்ட முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பிவைக்குமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Director of Municipal Administration is directed to issue appropriate instructions to the Madurai Corporation Commissioner to stem the rot in the non enforcement of Town and Country planning Act 1971 and reinforced by subsequent directions in the G.O. Hg & UD No.7 dated 10.01.2023. Unless strict action against the delinquent officials who intentionally default in the respective enforcement of the Town and Country Planning Act, Rules and regulations is taken, the situation will not change. Collusion, complicity connivance besides wanton omission in enforcing Building Rules are nakedly seen in the zonal administration. The Forum expresses its deep shock

disappointment and anguish over such maladministration in the matter of enforcement of Building Rules in the Madurai Corporation.

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா.மயில்சாமி,
த/பெ. திரு.இராமலிங்கம்,
பிளாட் எண்.5, அய்யப்பன் நகர்,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை – 625 018.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002.

3) உதவி ஆணையர்,
மண்டலம்–02 (வடக்கு)
மதுரை மாநகராட்சி,
மதுரை–625 007. (ஆணையர் வழியாக)

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
9/10